**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**அசல் வழக்கு எண். 110/2025**

**வா.சா. 2– ஆறுமுகம்**

**முதல் விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | வா.சா.ஆ.16 | எனது ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. |

**23.02.206**

**1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

1. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். ராஜாமணி எனக்கு என்ன உறவு என்றால் அவர் எனக்கு அக்கா. ராஜாமணிக்கு 1982ம் ஆண்டு வாக்கில் திருமணம் நடைபெற்றது. ராஜாமணியின் திருமணம் இந்து முறைப்படி நடந்ததா அல்லது முஸ்லீம் முறைப்படி நடந்ததா என்று எனக்கு தெரியாது. ராஜாமணியின் திருமணத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. ராஜாமணி 1ம் வகுப்பு வரை படித்திருக்கலாம். அவர் கல்வி பயின்றவாறு எனக்கு தெரியாது. ராஜாமணி எனக்கு 10 வயது மூத்தவர். ராஜாமணி பிறகு நான் தான் பிறந்தேன். எங்களது பெற்றோர்கள் இறந்து விட்டார்கள். அவரது வாரிசு மற்றும் இறப்பு சான்றிதழ் உள்ளது. வாரிசு சான்றிதழை தாக்கல் செய்தால் தான் ராஜாமணியும் நானும் சகோதர சகோதரிகளா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். ராஜாமணியும் அவரது கணவர் பாபுலாலும் எந்த ஆண்டு பிரிந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. ராஜாமணி எந்த ஆண்டு இறந்தார் என்றால் சுமார் 5 ஆண்டுகள் ஆகிறது தேதி தெரியாது. நான் அவரது இறப்பிற்கு சென்றிருந்தேன். ராஜாமணி எனது சகோதரியே கிடையாது என்றும் அவரது இறப்பிற்கு சென்றதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல.

2. வாதி எங்கு பள்ளி படிப்பை படித்தார். தற்போது எங்கு வேலை செய்து வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியும். அவர் பள்ளி படிப்பை 2,3 பள்ளிக்கூடங்களில் படித்தார். கடைசியாக பெருமாநல்லூரில் உள்ள பள்ளிக்கூடத்தில் படித்தார். நான் 1987ல் வெளிநாடு சென்றுவிட்டு 1999 நவம்பரில் இந்தியா வந்தேன். எனக்கு பாஸ்போர்ட் எவ்வாறு எடுக்க வேண்டும் என்ற விபரம் தெரியும். ராஜாமணி பாண்டியன்நகர் முகவரியில் இறந்தார். முகமது பாட்சா என்ற பெயரில் வாதி

பாஸ்போர்ட் வைத்திருந்த விபரம் எனக்கு தெரியாது. அவரது ஆதார் கார்டு, பள்ளி சான்றிதழ், வருமான கணக்கு அட்டை, வங்கி கணக்கு புத்தகம் , ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றில் முகமது பாட்சா என்ற பெயரில் உள்ள விபரம் எனக்கு தெரியும். வாதி விஜய் என்று பெயர் மாற்றம் செய்தது நேரடியாக தெரியுமா என்றால் வாதியின் தாயார் பிரிந்து வந்த பிறகு மனவேதனையில் இறந்து விட்டார். பிரிந்து வந்த பிறகு இந்துவாக வாழ்ந்ததால் எங்களில் சொந்தத்திலேயே இந்து பெண்ணை திருமணம் செய்து வைத்தோம். அந்த முறையில் விஜயாகவே இருந்து வந்தார். உறவினரின் மகளை திருமணம் செய்து வைத்ததால் ராஜாமணி எனதுசகோதரி என்றும், வாதியின் பெயர் விஜய் என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. விஜய் என்ற பெயரிலும் ஆதார் கார்டு, வங்கி கணக்கு புத்தகம் , ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றில் விஜய் என்ற பெயரில் உள்ள விபரம் தங்களுக்கு தெரியுமா என்றால் விஜய் என்ற பெயரில் ஆவணங்கள் இருந்த விபரம் தெரியும் என்ன ஆவணம் என்று தெரியாது. வாதி மோசடியாக விஜய் என்ற பெயரிலும், முகமது பாட்சா என்ற பெயரிலும் ஆவணங்களை உருவாக்கியுள்ளதால் சட்டப்படி தண்டணைக்குரிய குற்றம் என்றால் சரியல்ல. வழக்கு பற்றிய விபரம் எனக்கு தெரியாததால் எனது சாட்சியம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.02.23 12:41:27 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.